1970 செப்டம்பர் 1]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் இந்தப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலேயே சுஜாதா, பத்மா, ஜெயா என்றெல்லாம் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்போதிருந்த அரசு எந்தப் பெண்களின் மீது அன்பு கொண்டு இந்தப் பெயர்களை வைத்தார்கள் என்று தெரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதனால்தான் இப்போது "கருணா" என்று ஆண்களின் பெயரை வைக்க சர்க்கார் முன்வந்திருக்கிறது போலும்!

Industries in Tamil Nadu

* 173 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Chief Minister has written to the Centre around November, December, 1969 about the expansion of industries in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : குறிப்பிட்ட நவம்பர்–டிசம்பர் மாதங்களில் மத்திய அரசுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதவில்லை என்றாலும் அதற்கு முன்னாலோ, பின்னாலோ அது போன்று கடிதம் எழுதியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி 'எக்ஸ்பான்ஷன் ஆப் இண்டஸ்ட்ரிஸ்' பற்றி எழுதியிருக்கிறார்களா என்பது. முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு அடிக்கடி நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பற்றியும், லைசென்ஸ் அப்ளிகேஷன்ஸ் அங்கே கொடுக்கப்பட்டிருப்பவை அதிகமாக மறுக்கப்படுவதைப் பற்றியும், காலதாமதப் படுத்துவதைப் பற்றியும் எழுதி இருக்கிறார்கள். குறிப்பிட்ட மாதத்தில் சிமெண்ட் விற்பனை இல்லாத காரணத்தால் 'பூல் பிரைஸ்' வேண்டுமென்ற கோரிக்கையை சிமெண்ட் ஆலை அதிபர்கள் கொண்டு வந்ததையொட்டி அது பற்றி எழுதியிருக்கிறார்கள். ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலைக்கு 1963-ம் ஆண்டு கொடுக்கப்பட்ட அனுமதி மறுபடியும் மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றைக் கோவை மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பது பற்றியும் எழுதியிருக்கிறார்கள்.

Dr. H. V. HANDE : While it is laudable that our Hon Minister for Industries is taking a pragmatic view about industrial growth of our State and saying that more wealth should be created and he has also made a similar statement to that effect a few months ago, since a pragmatic view has been taken by this Government, since there is lot of trouble between State and Centre

whatever policy State want to pursue the Centre does not agree with that in view of the difference of opinion on this issue and in view of the fact that we have all the materials, (number of companies have come forward to start industries)—in view of all these, will the Hon. Minister for Industries tell us what exactly are the areas of difference of opinion between State and the Centre, in what exact manner the Centre is coming in the way of industrial growth of the State ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரிய தொழில் கொள்கையைப் பற்றிக் கேள்வி நேரத்தில் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை முரண்பட்ட கொள்கையைப் பின் பற்றி வருகிறது என்பதை அனுபவ பூர்வமாகப் பார்க்கிறோம். தொழில்கள் வளருவதன் மூலந்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். தொழில்கள் தொடங்குவதில் ஏராளமான இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இருக்கின்ற தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தேடித் தரக் கூட முடியாத துர்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பற்றி விரிவாகச் சொன்னால் கேள்வி நேரத்தில் இப்படி நீண்ட பதில் சொல்லுகிறீர்களே என்று பேரவைத் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளுவார்கள். பொதுவாக அரசாங்கத்தினுடைய கொள்கை தொழில் ஏராளமாகப் பெருக வேண்டுமென்பது. அதே சமயத்தில் பொருளாதாரம் ஒரு இடத்தில், தனி நபரிடத்தில் குவியக் கூடாது என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. பொதுத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, கூட்டுறவுத் துறையானாலும் சரி, தொழில்களை ஏராளமாகத் தொடங்கவேண்டும். இப்போது 14,000 பேர் எஞ்சினியர்கள், பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் வேலையில்லாமல் இன்றைய தேதியில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் மற்ற பல தொழில்களை ஏராளமாகத் தொடங்க வேண்டுமென்று மத்திய அரசை அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். இதற்கு மூலப் பொருள்களைப் பெற்றுத் தர மத்திய அரசினர் ஆட்சேபிக்கிறார்கள். ஃபாரின் எக்ஸ்சேஞ்சுக்கு ஆட்சேபிக்கிறார்கள். ஃபாரின் கொலாப்ரேஷனுக்கு ஆட்சேபணை வருகிறது. பல தடங்கல்கள் மத்திய அரசிலிருந்து வருகின்றன. இதைத் தடுக்க, அந்த அதிகாரத்தை ஸ்சென்ஸ் கமிட்டியிடம் கொடுக்காமல் முதலமைச்சர்கள் மாநாட்டின்போது அந்தந்த மாநில முதலமைச்சர்களைக் கலந்து எந்தெந்த மாநிலங்களில் எந்தெந்த தொழில்களை எப்படி எப்படித் தொடங்க வேண்டும், அதற்கு அந்நியச் செலாவணியை எப்படிப் பகிர்ந்து கொள்ளுவது, மூலப் பொருள்களை எப்படிப் பகிர்ந்து கொள்ளுவது என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

THIRU K. VINAYAKAM : Apart from the alleged unfriendly attitude of the Centre towards our State, what exactly are the steps taken by this Government to improve the industrial development or starting of fresh industries which lie within our capacity, within our resources ? What are the steps you have so far taken for the past four years ? Can you name them to the Assembly ?

1970 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஓர் அரசியல் நோக்கம் கொண்ட கேள்வியாகும். நம்முடைய வளர்ச்சியைப் பொறுத்தவரை அரசியல் நோக்கம் கூடாது என்பது கொள்கை. பிரதம அமைச்சரோடு "அன்-ஃப்ரெண்ட்லி"-யாக இருக்கிறோம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் பிரதம அமைச்சரோடு நெருக்கமாக இருப்பதாக எல்லோரும் சொல்லுகிறார்கள், உங்கள் கட்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். இதிலே ஃப்ரெண்ட்லி, அன்-ஃப்ரெண்ட்லி என்ற நிலைமை இல்லை. நம்முடைய மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்க மத்திய அரசு என்ன செய்திருக்கிறது என்பது பெரிய பிரச்சினை ஆகும். நம்மைப் பொறுத்த வரை—இன்ப்ரா—ஸ்ட்ரக்சர் தொழில்களைத் தொடங்குவதற்கான சூழ்நிலையைத்தான் உருவாக்க முடியும். மூலப் பொருள்களைத் தேடித் தருவது, உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தையைத் தேடித் தருவது, ஃபாரின் எக்ஸ்சேஞ்சு, ஃபாரின் கொலாப்ரேஷன் ஆகிய நான்கு முக்கியமான செயல்கள் மத்திய அரசால் செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கே தடை செய்தால் மாநில அரசின் முயற்சிகள் வெற்றி பெறமுடியாது. ஆயினும் மாநில அரசு எடுத்து வரும் பெரு முயற்சியின் காரணமாகத்தான் கடந்த 20 ஆண்டு காலமாக வராத சேலம் உருக்காலைத் திட்டம் 100 கோடி ரூபாய்க்கு இன்று வந்திருக்கிறது. மேலும் புதிய புதிய தொழில்சாலைகளுக்கு அனுமதி தரவும் முன்வந்திருக்கிறார்கள். 200 கோடி ரூபாயில் ஒரு ரசாயனத் தொழிற்சாலை—காம்ப்ளெக்ஸ் கெமிகல் அண்டு பெட்ரோ காம்ப்ளெக்ஸ்—ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டு அடிக்கடி பிரதம அமைச்சர் அவர்களை வலியுறுத்தி வருகிறோம். நம்முடைய திரு. விநாயகம் அவர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்சி நோக்கம் பாராது தமிழ் நாட்டுக்குத் தேவை என்று வாதாட முன்வரவேண்டும். ஏன் தமிழ் நாட்டுக்கு மட்டும் 17 கோடி ரூபாய் கொடுத்தார்கள், உ.பி.-யில் பஞ்சம் இல்லையா என்ற ஒரு சிறு கேள்வியை நீங்கள் கேட்கப்போய் அதனுடைய விளைவுகளை இன்று தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தொழிற்துறையில் லைசென்ஸ் முறையில் இருக்கும் சிரமத்தின் காரணமாகப் பணம் படைத்தவர்கள் தொழிலை ஆரம்பிக்க முன்வருவதில்லை. ஆகவே, தொழில்களை ஆரம்பித்து விட்டு அரசாங்கத்திற்குப் பிறகு விண்ணப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலைமையை அரசாங்கம் உருவாக்குமா ?

மாண்புமிகு. திரு. செ. மாதவன் : மத்திய அரசுதான் அதற்கான அனுமதியைத் தரவேண்டுமே தவிர, எங்களுடைய அரசுக்கு அதிலே அதிகாரம் இல்லை. அதற்கு அரசியல் அமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு முழு உரிமை உண்டு என்று கேட்டுக் கொண்டு வருகிறோம். அதற்காகத்தான் மாநில சுயாட்சி மாநாடு நடக்கப் போகிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அதிலே சேர்ந்து, போராட்டம் நடத்தாமல் அந்த அதிகாரங்களைப் பெற்றுத் தர

முயற்சிப்பார்களானால் அதிகமான தொழில்களை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பிக்க முடியும். இதிலே முக்கியமானது லைசென்ஸ் பெறுவது என்பதல்ல. இதிலே வெளிநாட்டுச் செலாவணி முக்கிய பங்கு வகிக்கிறது. அதிலே மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுவதால் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் ஏராளமான தொழில்களை தொடங்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய அரசுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தொழில்கள் அபிவிருத்திக்காக மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம், கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று இந்த அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே, இங்கே ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு வழி கிடையாது. மூடப்பட்ட ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை இன்னும் திறக்கப்படாமலே இருக்கிறது. இந்தத் தொழில்களை எல்லாம் மறுபடியும் திறக்க முடியாத நிலையில் மத்திய அரசின் மேல் குற்றம் சாட்டுவது பொருத்தமானது தானா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாதாட முன்வந்ததற்காக, மகிழ்ச்சி. தொடர்ந்து அவர் அப்படி வாதாட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. இந்த அரசு மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. இதிலே அரசியல் கண்ணோட்டம் பார்க்கக்கூடாது. சதர்ன் ஸ்ட்ரக்சுரல் தொழிற்சாலையின் 10 ரூபாய் ஷேர் 50 காசுக்குத்தான் இன்று பொறுமானம் என்ற நிலையிலும் 2½ ரூபாய் தரச் சொல்லி, பிறகு 4 ரூபாய் கூடத் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். அதைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பற்றிச் சொன்னார்கள். அந்த அட்மினிஸ்ட்ரேஷனில் பெரிய கிரானிக் டிஃபெக்ட் இருந்திருக்கிறது. இதுவரை ஒருவர் கூட அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடந்ததாகச் சொல்லவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் கூட பிரதம அமைச்சர் அவர்களுடனும், தொழில் அமைச்சர் அவர்களுடனும் இதைப் பற்றி விவாதித்தோம். அங்குள்ள முக்கியமான பிரச்சினை அந்தத் தொழிற்சாலையில் 3,500 முதல் 5,000 கார்கள் வரை உற்பத்தி செய்ய அவர்களுக்கு அனுமதி இருக்கிறது: அவர்கள் உற்பத்தி செய்தது 1,100 கார்கள் தான். அவர்களாகக் குறைத்துக் கொண்டார்கள். இயலாமையால் அல்ல. அதற்குப் பிறகு தொழில் தகராறு வந்தது. அதன் காரணமாக, தானாகவே உற்பத்தியைக் குறைத்துக் கொண்டதாக முதலாளி வர்க்கம் காட்ட விரும்பவில்லை. அந்தத் தொழிற்சாலையை தென் மாநிலங்களில் உள்ள ஒரே தொழிற்சாலை என்ற முறையில் நடத்த முடியும் என்பதைப் பிரதம அமைச்சரிடம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அவர்களும் நல்ல வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அடிப்படையில் சரித்திரமே கண்டிராத

1970 செப்டம்பர் 1]

முறையில் நான்கே நாட்களில் அனுமதி வாங்கினேம். முன்னுல் சீப் செக்ரடரியாக இருந்தவர் தலைவராக இருந்து அதைப் பற்றி ஆராய்ந்து வருகிறுர். அவருடைய அறிக்கை கிடைத்த பிறகு இந்தத் தொழிற்சாலையை உன்னதமான முறையில் தொடங்குவதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிவோடு தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

* 174 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1969-ம் ஆண்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலை களைத் துவக்க விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேர்களுக்கு (லைசென்ஸ்) அனுமதி கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாட்டில் பெரிய அளவுத் தொழில்களை நிறுவுவதற்காக, 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வேண்டி, 1969-ம் ஆண்டில் 97 பேர் மனுச் செய்து கொண்டுள்ளார்கள்.

(இ) 29 பேர்களுக்கு உரிமங்களும், முன்னேடி அனுமதிக் கடிதங்களும் Letters of Intent அளிக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, 29 பேருக்கு போக, மீதம் பேருடைய விண்ணப்பங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அனுமதி பெற்றவர்கள் எவ்வளவு பேர் தொழில் ஆரம்பித்து இருக்கிறுர்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 29 பேரில் எவ்வளவு பேர் தொழில் தொடங்கி இருக்கிறுர்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. மீதியுள்ள மனுக்கள் எல்லாம் பல விதமான 'ஸ்டேஜ்'களில், கால கட்டங்களில் கவனிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக, சில தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் Letters of Intent கொடுத்ததற்குப் பின்னுலே அதிலே கூட மத்திய அரசு தகராறு செய்கிறது. உதாரணமாக, தூத்துக்குடி தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், மூலப் பொருள் நாப்தாவா, ஃப்யுல் ஆயிலா என்று மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. Letters of Intent "கொடுத்ததற்குப் பின்னுலே Foreign Collaboration கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்று பரிசீலனை செய்கிறது. பல விதமான பிரச்சினைகளால், இந்த மனுக்கள் காலதாமதம் ஆகிறது. அண்மையில், நானும், முதலமைச்சரும், மத்தியத் தொழில் அமைச்சரை கேட்டபோது, கிட்டத்தட்ட 1,000 மனுக்கள் இந்தியா முழுவதற்கும் pending ஆக இருக்கிறது, விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று உறுதி சொல்லி இருக்கிறுர்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், சென்ற 69-ம் ஆண்டிலே விண்ணப்பித்துக் கொண்டார்களே, அதிலே பெரிய தொழிற் சாலைக்கு என்று விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர், சிறிய